FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313248

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 20/2026/AE/ICB Date: நாள் 12.10.2026 0700 hrs.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(b)
(ii) Act சட்டம்: as amended in 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.08.2026 Date to : நாள் வரை 05.10.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1645 hrs. Time to : நேரம் வரை 1100 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.10.2026 Time : நேரம் 1100 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL II of G.D. 06.10.2026 Time : நேரம் 1100 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South, at about 32 Km.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி In the Jurisdiction of Thamaraikulam E.B. office.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Suresh kumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Shanmugam (Late)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23/2026 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Farmer
(g) Address : முகவரி Door no: 5/153, Pattanam, Nallattipalayam Post, Kinathukadavu, Coimbatore - 642109.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Velmurugan, Commercial inspector, E.B. office, Thamaraikulam, Kinathukadavu Taluk, Coimbatore Dist.
2. Tr. Naveenkumar, Lineman, E.B. office, Thamaraikulam, Kinathukadavu Post, Coimbatore Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet herewith enclosed..

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Sd/- S. 12/10/2026

12/10/2026.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.10.2026 at 0815 hrs.

Name: பெயர் J. Prabudass.
Rank: நிலை Inspector of Police,
VCAC, Coimbatore.

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/2026/ AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.C-8313248-ன் தொடர்ச்சி.

06.10.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு காவல் ஆய்வாளர் J.பிரபுதாஸ் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு, நல்லட்டிபாளையம் அஞ்சல், பட்டணம், க.எண்.5/153 என்ற முகவரியை சேர்ந்த திரு.சண்முகம் (லேட்), என்பவரது மகன் திரு.S.சுரேஷ்குமார் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், தாமரைகுளம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் Commercial Inspector திரு.வேல்முருகன் என்பவர் புகார்தாரரின் தோட்டத்தில் உள்ள ஆழதுளை கிணற்று மோட்டருக்கு புதிய 3 Phase விவசாய மின் இணைப்பு வழங்குவதற்காக மேற்படி நிலத்தை inspection பார்த்தும், அதற்கான மின் கம்பிகளை மாற்றி வேலைகளை செய்து கொடுத்ததற்கும் புகார்தாரரிடம் லஞ்சமாக ரூ.1,000/- மற்றும் ரூ.5,000/- கேட்டு அதை G-Pay மூலம் பெற்றுக்கொண்டதும், அதனைத்தொடர்ந்து லைன்மேன் திரு.நவீன்குமார் என்பவர் புகார்தாரரின் தோட்டத்தில் மெயின் கம்பத்திலிருந்து அவரது ஆழ்துளை கிணறு மீட்டர் பாக்ஸ்க்கு லைன் கொடுத்து வேலையை முடித்துகொடுத்ததற்கு தனியாக ரூ.1,000/-ஐ லஞ்சம் கேட்டுவருவதும் தெரிய வந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 12.10.2026-ம் தேதி காலை 07.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 20/2026/ AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகள் Commercial Inspector திரு.வேல்முருகன் மற்றும் லைன்மேன் திரு.நவீன்குமார் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர்: S.சுரேஷ்குமார், வயது 25, த/பெ.சண்முகம், (லேட்) க.எண்.5/153, பட்டணம், நல்லட்டிபாளையம் அஞ்சல், கிணத்துக்கடவு, கோயம்புத்தூர்-642109. பெறுநர்: உயர்திரு காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புதுறை, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர். நான் கோவை, கிணத்துக்கடவு, நல்லட்டிபாளையம், பட்டணத்தில் எனது அம்மா மகேஸ்வரி அவர்களுடன் வசித்து வருகிறேன். நான் BE CSE வரை படித்துள்ளேன். நான் எங்களுக்கு சொந்தமான கிணத்துக்கடவு, பட்டணத்தில்

க.ச.எண். 263/1 -ல் சுமார் 6 ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் பார்த்து வருகிறேன். மேற்படி நிலத்தில் 250 தென்னை மரங்களும், ஒரு பகுதியில் காய்கறிகளை பயிர்செய்தும் வருகிறோம். மேற்படி நிலம் எனது அப்பா சண்முகம் அவர்கள் பெயரில் உள்ளது. எனது அப்பா கடந்த 2025-ம் வருடம் இறந்துவிட்டார். அதன்பின்பு மேற்படி நிலம் எனது அம்மா மகேஸ்வரி, அக்கா கார்த்திகா மற்றும் எனது பெயரிலும் கூட்டுப்பட்டாவில் உள்ளது. மேற்படி எங்களது விவசாய நிலத்தில் கடந்த 04.07.2026-ம் தேதி Borewell போட்டு முடித்தோம். அதன்பின்பு மேற்படி Borewell மோட்டார் பயன்படுத்த வேண்டி 3 Phase லைன் விவசாய புதிய மின் இணைப்பு கேட்டு கடந்த 22.07.2026-ம் தேதி ஆன்லைன் மூலம் நிலத்தின் பத்திர நகல், பட்டா, சிட்டா, அடங்கல், உரிமை சான்று, அப்பாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகிய ஆவணங்களை இணைத்து எனது பெயரில் கிணத்துக்கடவில் உள்ள இ-சேவை மையத்தின் மூலம் விண்ணப்பம் செய்தும், அதற்கான Registration cum Processing கட்டணத்தை 23.07.2026-ம் தேதி ரூ.220/-ஐ ஆன்லைன் மூலம் செலுத்தி இரசீது எண். PGCCAN884543700 பெற்றேன். அதன்பின்பு இரண்டு நாட்கள் கழித்து கோவை மெயின்ரோட்டில் அமைந்துள்ள தாமரைக்குளம் EB Office-க்கு சென்று Commercial Inspector திரு.வேல்முருகன் என்பவரை சந்தித்து, அவரிடம் ரூ.220/- செலுத்திய இரசீதை காண்பித்து 3 Phase விவசாய புதிய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்தது குறித்து அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் ஆன்லைனில் பார்த்துவிட்டு Land Verification-க்கு எங்கள் தோட்டத்திற்கு வருவதாக சொன்னார். நானும் சரி என்று சொல்லி அங்கிருந்து வந்துவிட்டேன். அதன்பின்பு CI திரு.வேல்முருகன் அவர்கள் 03.08.2026-ம் தேதி மாலை சுமார் 4.15 மணிக்கு எங்கள் தோட்டத்திற்கு வந்து மேற்படி நிலத்தை Inspection செய்ய வந்துள்ளதாக என்னிடம் தெரிவித்து எங்களது நிலம் மற்றும் Bore well மோட்டார் ஆகியவற்றை ஆய்வு செய்தார். அப்போது அவர் என்னிடம் 3 Phase விவசாய புதிய மின் இணைப்பை Approval கொடுப்பதற்கான பைலை அவர் ரெடி செய்து JE அவ்ர்களுக்கு அனுப்பிவிடுவதாகவும், அதன்பிறகு JE-யிடமிருந்து நெகமம் மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று மின் இணைப்பு சம்மந்தமாக அரசு கட்டணம் செலுத்த தகுந்த உத்திரவு வரும் என்றும், அதன்பின்பு ஆன்லைன் மூலம் உரிய கட்டணத்தை செலுத்திய பிறகு 3 Phase விவசாய புதிய மின் இணைப்பு Approval வரும் என்று என்னிடம் தெரிவித்தார். மேலும் அவர், எங்கள் நிலத்தை Inspection செய்ததற்கு தற்போது ஏதாவது பார்த்து பண்ணுங்க என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம் என்ன சார் எனக்கு புரியவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் உங்கள் நிலத்தை Inspection பார்த்ததற்கு தனியாக 1000 ரூபாய் கொடுங்கள் என்று என்னிடம் கேட்டார். நான் G-Pay பண்ணலாமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் சரியென்று சொல்லி அவரது தொலைபேசி எண் 9444648727-ஐ என்னிடம் கொடுத்து இதற்கு ரூ.1000/- G-pay பண்ணுங்க என்று சொன்னார். நான் Inspection கட்டணம் என கருதி, எனது போன் நம்பர் 9750940831-ல் இருந்து G-Pay மூலம் சுமார் 4.45 மணிக்கு ரூ.1000/-ஐ CI திரு.வேல்முருகன் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதன்பின்பு ஒரு வாரம் கழித்து கிணத்துக்கடவில் உள்ள இ-சேவை மையம் சென்று விசாரித்து அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களான Meter Caution Deposit -

ரூ.2215/-, CC Deposit - ரூ.5970/-, Development Charges - ரூ.13,290/-, Service Connection Charges - ரூ.1660/-, Registration cum Processing Charges- ரூ.220/- என மொத்தம் ரூ.23,355/-ஐ கடந்த 10.08.2026-ம் தேதி ஆன்லைன் மூலம் செலுத்தி இரசீது எண்.PGCCAN889634898 பெற்றேன். அதன்பிறகு 12.08.2026-ம் தேதி மாலை சுமார் 6.10 மணிக்கு எனது செல்போன் எண் 9750940831 லிருந்து CI திரு.வேல்முருகன் அவர்களது செல்போன் எண் 9444648727-க்கு அழைத்து சார் ஆன்லைனில் பணம் செலுத்திய விபரத்தை சொல்லி Connection எப்ப கொடுப்பீங்க என்று கேட்டேன். அதற்கு அவர் நெகமம் அலுவலகத்திலிருந்து உத்திரவு வரும் என்று சொன்னார். அதன்பின்பு நான் இரண்டு மூன்று முறை அவரை செல்போனில் அழைத்து மின் இணைப்பு சம்மந்தமாக கேட்டேன். இதற்கிடையில் EB customer care-க்கு போன் செய்து கேட்டபோது 09.08.2026-ம் தேதி Approval கிடைத்துவிடும் என்று உள்ளதாக தெரிவித்தார்கள். அதற்கு பின்பு கடந்த 11.09.2026-ம் தேதி காலை சுமார் 10.50 மணிக்கு CI திரு.வேல்முருகன் அவர்களுக்கு போன் செய்து Approval சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் officers எல்லாம் பிசியாக இருக்கிறார்கள் ஒரு வாரத்தில் வந்துவிடும் என்று சொன்னார். 30.09.2026-ம் தேதி காலை சுமார் 9.15 மணிக்கு CI திரு.வேல்முருகன் அவரது செல்போன் எண்.9444648727-ல் இருந்து எனக்கு போன் செய்தார். நான் எடுப்பதற்குள் போன் கட்டாகிவிட்டது. நான் உடனே அவருக்கு போன் செய்தேன். அப்போது CI திரு.வேல்முருகன் அவர்கள் இன்னைக்கு ஆட்கள் வேலை செய்ய வருவார்கள் என்று சொன்னார். நானும் சரியென்று சொன்னேன். அதன்படி சுமார் 11.00 மணிக்கு போர்மேன் திரு.மோகன் மற்றும் சில அலுவலர்கள் வந்து எங்கள் தோட்டத்தில் உள்ள போஸ்ட்டு கம்பிகளை 3Phase –க்காக புதிதாக மாற்றி கொடுத்து சென்றுவிட்டார்கள். அன்றையதினமே CI திரு.வேல்முருகன் அவர்கள் மாலை சுமார் 3.45 மணிக்கு எங்கள் தோட்டத்திற்கு நேரில் வந்து என்னிடம் கம்பிகள் மாற்றியுள்ளதாகவும், அதற்கு ரூ.5000/- வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் என்ன சார் இவ்வளவு அமௌவுண்ட் என்று கேட்டேன். அதற்கு அவர் 3Phase line எல்லாம் மாற்றியுள்ளது அதற்காக தான் 5000 ரூபாய் என்று என்னிடம் சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் G-Pay மூலம் CI திரு.வேல்முருகன் அவர்களது செல்போன் எண் 9444648727-க்கு ரூ.5,000/- அனுப்பிவைத்தேன். அதற்காக அவரிடம் ரசீது கேட்டபோது மேற்படி Google Pay மூலம் பெற்றுக்கொண்ட மேற்படி தொகைகள் ரூ.1,000/- இன்ஸ்பெக்சன் பார்த்தற்காக என்றும் மற்றும் ரூ.5,000/- 3 Phase Line மாற்றி கொடுத்ததற்காக பெற்றுக்கொண்ட பணம் என்றும் அதற்கு ரசீது எதுவும் இல்லை என்று தெரிவித்தார். அப்போது தான் CI திரு.வேல்முருகன் என்னிடம் கேட்டுப்பெற்ற பணம் லஞ்சப்பணம் என்று தெரியவந்தது. மேலும் அவர் வொயரிங் வேலையை செய்து வைக்குமாறும், அதன்பின்பு லைன்மேன் வந்து கனெக்சன் கொடுப்பார் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். அதன்பின்பு நான் வொயரிங் வேலைகளை செய்து முடித்தேன். நேற்று 05.10.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு லைன்மேன் திரு.நவீன்குமார் என்பவர் எனது தோட்டத்திற்கு வந்து மெயின் கம்பத்திலிருந்து எங்களது மீட்டர் பாக்ஸ்க்கு லைன் கொடுத்துவிட்டு, ரூ.1500/- கொடுங்கள் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் எதுக்குங்க இவ்வளவு பணம் என்று கேட்டேன் அதற்கு அவர் லைன் கொடுப்பதற்கு single phase என்றால் ரூ.500/- என்றும், 3 phase என்றால் ரூ.1000/-

என்றும் சொல்லி உங்களுடையது 3 phase அதனால் லைன் கொடுத்ததற்கு தனக்கு ரூ.1000/- என்றும், போர்மேனுக்கு ரூ.500/- தர வேண்டும் என்றார். அதற்கு நான் போர்மேனுக்கு எதுக்கு சார் என்று கேட்டேன் அதற்கு லைன் மேன் திரு.நவீன்குமார், நான் மீட்டர் பாக்ஸ் மட்டும் மாட்டியிருக்கேன், உங்களுக்கு சர்வீஸ் நம்பர் இன்னும் கொடுக்கல, சர்வீஸ் Wire மற்றும் சீல் வைத்ததையும் போட்டோ எடுத்து அதன்பிறகு சர்வீஸ் நம்பர் கொடுத்து அதை உங்க பாக்சில் வந்து எழுத வேண்டும் அந்த வேலையை போர்மேன் திரு.மோகன் அவர்தான் நாளை வந்து உங்களுக்கு செய்து கொடுப்பார் என்றும், அவருக்கு ரூ.500/- என்றும், போர்மேன் திரு.மோகன் அவர்கள் உங்களிடமிருந்து கேட்டுப்பெற்றுக்கொள்வார் என்றும், தற்போது தனக்கான பணம் ரூ.1,000/- மட்டும் கொடுக்குமாறு லைன்மேன் திரு.நவீன்குமார் என்னிடம் கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று லைன்மேன் திரு.நவீன்குமாரிடம் சொன்னேன். அதற்கு அவர் சரியென்று சொல்லி இரண்டு நாட்களில் பணத்தை ரெடி செய்து ஆபீஸ் வந்து கொடுங்கள் என்று சொல்லி அங்கிருந்து சென்று விட்டார். இந்த விசயத்தை எனது அம்மா மற்றும் அக்காவிடம் தெரிவித்தபோது அவர்களும் லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாம் என்று தெரிவித்தார்கள். மேலும் மெயின் கம்பத்திலிருந்து எங்களது மீட்டர் பாக்ஸ்க்கு லைன் கொடுத்து வேலையை முடித்து கொடுத்து ரூ.1,000/-ஐ என்னிடம் லஞ்சம் கேட்ட லைன்மேன் திரு.நவீன் குமார் மற்றும் ஏற்கனவே எங்கள் விவசாய புதிய மின் இணைப்பு கொடுக்க inspection பார்த்தும், அதற்கான கம்பிகளை மாற்றி வேலைகளை செய்து கொடுத்ததற்கும் என்னிடமிருந்து தனியாக லஞ்சமாக ரூ.1,000/- மற்றும் ரூ.5,000/-ஐ G-Pay மூலம் கேட்டு பெற்றுக்கொண்ட Commercial Inspector திரு.வேல்முருகன் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுகொள்கிறேன். நாள்: 06.10.2026 இடம்: கோவை இப்படிக்கு XXXXXX, 06.10.2026 Suresh Kumar. Respected Sir, Received the complaint on 06.10.2026 at about 11.00 hrs. sd.XXXXX, .06.10.2026, Inspector of Police, V&AC, CBE. Respected Sir, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.20/2026/AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 12.10.2026 at about 0700hrs sd.XXXXX, 12.10.2026, Inspector of Police, V&AC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கன சிறப்பு நீதி மன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

12/10/2026.

(J.பிரபுதாஸ்),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.